00010

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD3532/ESD1232** – கலைத்திட்டக் கற்கையும் செய்கையும் கணிதமும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.07.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. ஜீன் பியாஜேயின் விருத்திக் கட்டங்களையும் அவற்றுக்கு ஒத்த வயதுகளையும் அட்டவணைப்படுத்துக.
2. "ஸ்கீமா" வின் தொழிற்பாடுகளை விபரிக்குக.
3. ஆரம்பக் கணிதத்தின் பிரதான எண்ணக்கருக்களை பட்டியலிடுக.
4. ஆரம்பக் கட்டத்தில் கற்பித்தல் - கற்றலை அடைவதற்குரிய **ஐந்து** (05) நோக்கங்களை பட்டியலிடுக.
5. i) இலங்கையின் ஆரம்பக் கல்வியின் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் பிரதான **மூன்று** (03) மூலங்கள் எவை?

   ii) வரைபடத்தின் உதவியுடன் இந்த மூலங்கள் முதன்மை நிலைகளில் எவ்வாறு மாற்றமடைகின்றனவென விளக்குக.
6. வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்தில் கணிதம் காணப்பட்டது என்பதற்கான **நான்கு** (04) சான்றுகளைத் தருக.
7. ஆரம்ப நிலைகளில் விருத்தி செய்யப்பட வேண்டுமென தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட **ஐந்து** (05) அடிப்படை தேர்ச்சிகளை குறிப்பிடுக.
8. டிஸ்லெக்ஸியா (Dyslexia) வின் இயல்புகளை விபரிக்குக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** "கற்பித்தல் சாதனங்கள்" என்னும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் வரையறுக்க.

(05 புள்ளிகள்)

**ii.** ஆரம்ப வகுப்புக்களில் கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

**iii.** **a)** டீன்ஸ் குற்றிகளை வரைபடத்துடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

**b)** பின்வரும் செய்கைகளுக்காக டீன்ஸ் குற்றிகளை எவ்வாறு பயன்படுத்துவீரென விளக்குக.

**i.** 2023 என்பதன் இடப்பெறுமானத்தை குறிக்க.

**ii.** 234 + 458

**iii.** 608 + 437

(05 புள்ளிகள்)

10.

**i.** பின்வரும் பதங்களை விபரிக்குக.

**i.** முறைமைசார் வழுக்கள்

**ii.** கவனயீன வழுக்கள்

**iii.** எழுந்தமான வழுக்கள்

**(03 x 1 = 3** புள்ளிகள்)

**ii.** கூட்டல் தொடர்பான ஐந்து வழுக்களை பட்டியலிடுக. ஒவ்வொரு வழுவிற்கும் உதாரணம் தருக.

(05 புள்ளிகள்)

**iii.**

| | | | | |
|---|---|---|---|---|
| + 23 | + 80 | + 69 | + 37 | + 23 |
| 41 | 75 | 83 | 36 | 94 |
| 10 | 20 | 26 | 19 | 18 |

மேலேயுள்ள கூட்டல் செய்கைகள் தரம் மூன்று மாணவனொருவனால் செய்யப்பட்டதாகும். மேலேயுள்ள வழுக்களை அவதானிக்க அதே மாணவன் கீழுள்ள வினாவிற்கு விடையளிப்பானாயின் அவனது விடை யாது?

(08 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| + 75 | + 37 | + 94 | + 54 | + 12 |
| 23 | 81 | 63 | 47 | 92 |
| | | | | |

இவ்விடையை விபரிக்குக.

இவ்வழுவிலிருந்து இந்த மாணவன் விடுபட எடுக்கக் கூடிய பொருத்தமான பரிகாரக் கற்றல் முறையினை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

11.

**i.** 1960களில் ஆரம்பக் கல்வியில் பயன்படுத்தப்பட்ட மூன்று ஆர்களும் (3R) எவை?

(03 புள்ளிகள்)

**ii.** கலைத்திட்ட சட்டத்தை பயன்படுத்தி இலங்கையின் 1998ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தை விளக்குக.

(17 புள்ளிகள்)

12. "இலங்கையின் ஆரம்பக் கணித பாடத்திட்டமிடலில் ஏழு படிகள் காணப்படுகின்றன. "பாடத்திற்கான தெளிவான குறிக்கோள் என்பது முதலாவது படியாகும்"

   **i.** மற்றைய ஆறு படிகளையும் பட்டியலிடுக.

   **(06 புள்ளிகள்)**

   **ii.** "இரண்டு ஈரிலக்க எண்களை கொண்டு செல்லலுடன் கூட்டுதல் என்பது ஒரு பாட குறிக்கோளாகும்." இந்தக் குறிக்கோளுக்கு அமைவாக பாடத்திட்டமிடலை எழுதுக.

   **(14 புள்ளிகள்)**

13.

   **i.** "கணிப்பீடு என்னும் பத்தினை வரையறுக்க.

   **(05 புள்ளிகள்)**

   **ii.** பின்வருவனவற்றை விளக்குக.

   அ) நியமம்சார் கணிப்பீடும் நியதிசார் கணிப்பீடும்

   ஆ) இடைநிலைக் கணிப்பீடும் இறுதிநிலை கணிப்பீடும்

   **(05 புள்ளிகள்)**

   **iii.** ஆரம்ப நிலைகளில் இடைநிலைக் கணிப்பீட்டைப் பயன்படுத்துவதலானது இறுதிநிலைக் கணிப்பீட்டைப் பயன்படுத்துவதிலும் சிறந்தது. இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையினை நியாயப்படுத்துக.

   **(10 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -